## ராஜிவ்காந்தி மருத்துவமனை எதிரே மேம்பால பணிகள் ஆய்வு

**புதுச்சேரி, ஆக. 14–**

ராஜிவ்காந்தி மருத்துவமனை சிக்னலை பாதிக்காத வகையில் மேம்பால பணிகள் தொடர்பாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தினர்.

புதுச்சேரி இந்திரா சதுக்கம் முதல் ராஜிவ் சதுக்கம் வரை 3.877 கி.மீ., நீளத்துக்கு உயர்மட்ட மேம்பாலம் ரூ.436 கோடியில் கட்டப்பட உள்ளது. மேலும் ரூ.25.05 கோடி மதிப்பில் 13.63 கி.மீ., தொலைவுக்கு கிழக்கு கடற்கரைசாலையும் மேம்படுத்தப்பட உள்ளது.

மேம்பால பணிக்கு முன்பாக மணல் ஆய்வு பணிகள் நடந்து வருகிறது. இரண்டு மாதத்திற்குள் மேம்பால டிசைன் இறுதி வடிவம் பெற்று விடும். இதற்கிடையில் நுாறடி ரோடு,ராஜிவ் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவனை எதிரே பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் சீனிவாசராம், போக்குவரத்து போலீசார் இணைந்து நேற்று ஆய்வு நடத்தினர். ஒரு மணி நேரத்திற்கு மேலாக நடந்த ஆய்வில் மேம்பால துாண்கள் அமைப்பது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

இது குறித்து பொதுப் பணித் துறை அதிகாரிகள் கூறுகையில், ராஜிவ்காந்தி மகளிர் குழந்தைகள் மருத்துவமனையில் அமைய உள்ள மேம்பால துாண்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. இங்குள்ள சிக்னல் பகுதியை பாதிக்காத வகையில் மேம்பால துாண்கள் அமைக்க விவாதிக்கப்பட்டது. இதேபோல் சாரதாம்பாள் கோவில் பகுதி சாலையில் நிறைய மரங்கள் உள்ளன. அந்த மரங்களை வெட்டாமல் மேம்பாலம் அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது' என்றார்.

# மீன் பதப்படுத்துதல் திட்டம் குறித்து முதல்வரிடம் அதிகாரிகள் விளக்கம்

**புதுச்சேரி, ஆக. 14–**

மீன் பதப்படுத்துதல் திட்டம் குறித்து, முதல்வர் ரங்காமியிடம் மீன்வளத்துறை அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

மாநிலத்தில் மீன் பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டுதல் மற்றும் ஏற்றுமதிக்கான முக்கிய மையமாக மேம்படுத்தும் அரசின் தொலைநோக்கு பார்வைக்கு ஆதரவாக, புதுச்சேரியில் செயல்படுத்தப்பட உள்ள மீன்வள தடமறிதல் முன்னெடுப்பு குறித்து தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகத்தின் மீன்வள கல்லுாரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின்இயக்குநர் கிருஷ்ணன், முதல்வர் சண்முகம், அமெரிக்கா நிறுவனத்தின் மீன் வளம் மற்றும் கடல்கள் பிரிவு துணை தலைவர்கேத்தரின் டேக்ரோ செட்



புதுச்சேரியில் மீன் பதப்படுத்துதல் திட்டம் குறித்து சட்டசபையில் முதல்வர் ரங்காமியிடம் மீன்வளத்துறை அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

போன்சான் மற்றும் குழுவினர் இத்திட்டம் குறித்து முதல்வர் ரங்கசாமியை சட்டசபையில் சந்தித்து பேசினர்.

அப்போது புதுச்சேரி அரசின் மீன்வளத் துறை செயலர்மணிகண்டன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் முகமது இஸ்மாயில் மற்றும் துறையின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் புதுச்சேரியில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட உள்ள கடல் உணவுப் பொருட்களின் தடமறிதல் திட்டம் குறித்து இயக்குநர் விளக்கமளித்தார். இத்திட்டத்தின் மூலம் மீனவர்கள் மற்றும் மீன்பிடிப் படகுகள், மீன் இறங்குதளங்கள், பதப்படுத்தும் நிறுவனங்கள், வணிகர்கள், ஏற்றுமதியாளர்கள் உள்ளிட்டோருக்கு இடையே நம்பகமான தகவல் சங்கிலி உருவாக்கப்படும். இதன் மூலம் மீனவர்கள் அதிக மதிப்புள்ள சந்தைகளை அணுகுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

புதுச்சேரியின் முக்கியமான கடலோர அமைவிடம், மீன்வள ஆதாரங்கள், மீன்பிடிப் படகுகள், ஏற்கனவே உள்ள உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் முக்கிய சந்தைகள் மற்றும் போக்குவரத்து தளவாட இணைப்புகள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு, புதுச்சேரியின் மீனவ சமூகங்கள் மற்றும் கடல் உணவு சார்ந்த தொழில்களின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட உள்ளது.





# நகை, பணம் திருடி வாங்கிய கண்டெய்னர் லாரி பறிமுதல்

**அரியாங்குப்பம், ஆக. 14–**

நகை, பணம் திருடி வாங்கிய கண்டெய்னர் லாரியை போலீசார் பறிமுதல் செய்தனர்.


தவளக்குப்பம் அடுத்த நல்லவாடு தெற்கு தெருவை சேர்ந்தவர் விஜயேந்திரன், 41; மும்பையில் தனியார் கப்பல் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்.

இவரது மனைவி முகுந்தாவதி, 31. இவர் கடந்த 10ம் தேதி, அந்த பகுதியில் இரவு நடந்த கோவில் திருவிழா, பாட்டுக் கச்சேரிக்கு குழந்தைகளுடன் சென்றார்.

அப்போது, மர்ம நபர் வீடு புகுந்து பீரோவில் இருந்து 36 சவரன் தங்க நகைகள், 1.5 லட்சம் பணத்தை திருடிச் சென்றனர்.

இதுகுறித்து, முகுந்தாவதி அளித்த புகாரின் பேரில், தவளக்குப்பம் போலீசார் வழக்குப் பதிந்து, விசாரித்தனர்.

அதில், அதேப் பகுதியை சேர்ந்த அன்பரசன், 35, என்பவர் திருடியது தெரிய வந்தது. அவரை, போலீசார் நேற்று முன்தினம் கைது செய்து, சிறையில் அடைத்தனர். அவரிடமிருந்து, 30 சவரன் நகைகள் மற்றும் 1.5 லட்சம் ரொக்கத்தை போலீசார் பறிமுதல் செய்தனர்.



போலீசார் பறிமுதல் செய்த கண்டெய்னர் லாரி.

மேலும், விசாரணையில், அன்பரசன் அந்த பகுதியில் உள்ள வீடுகளில் திருடிய பணத்தில் மினி கண்டெய்னர் லாரி வாங்கியது தெரியவந்தது.

அதையடுத்து, கண்டெய்னர் லாரியை போலீசார் நேற்று பறிமுதல் செய்தனர்.

மேலும், அன்பரசன் தனது மொபைல் போன் மூலம் தொடர்பு கொண்டு பேசிய நபர்களிடம், போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

# 'நீட்' அல்லாத படிப்புகளுக்கு முதற்கட்ட கவுன்சிலிங் 7,590 மாணவர்களுக்கு சென்டாக் சீட் ஒதுக்கீடு

**புதுச்சேரி, ஆக.14–**

நீட் அல்லாத படிப்புககளுக்கு முதற்கட்ட கணினி கலந்தாய்வு நடத்தி, 7,590 மாணவர்களுக்கு சீட் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்டாக் நீட் அல்லாத தொழிற்கல்வி, கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் பட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு முதற்கட்ட கணினி கலந்தாய்வு நடத்திவரைவு சீட் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் சமர்ப்பித்த விருப்பத் தேர்வுகளின் அடிப்படையில், முதல்கட்டமாக 7,590 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. பி.டெக்., 3,112 மாணவர்கள், கலை மற்றும் அறிவியல் படிப்புகளில் 2,902 பேருக்கு சீட் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதர தொழிற்கல்வி படிப்புகளில் 1576 பேருக்கு எஞ்சிய இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

சீட் கிடைத்த மாணவர்கள் தங்களது லாகின் மூலம் உள்ளே நுழைந்து சேர்க்கை நிலையைச் சரிபார்த்துக் கொள்ளலாம். ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால், இன்று காலை 11:00 மணிக்குள் இணையதளத்தில் உள்ள கிரீவன்ஸ் விருப்பத்தைப் பயன்படுத்திப் பதிவு செய்யலாம்.

மாணவர்களின் புகார்கள் பரிசீலிக்கப்பட்டுத் தீர்க்கப்பட்ட பின்னரே முதல்கட்ட தற்காலிக ஒதுக்கீட்டுப் பட்டியல் வெளியிடப்படும்.

அதன்பின், மாணவர்கள் சேர்க்கைக்கான ஒதுக்கீட்டு ஆணையைப் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

தற்காலிக ஒதுக்கீட்டுப் பட்டியல் வெளியான பிறகு, மாணவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கல்லுாரியின் முதல்வரிடம் அசல் சான்றிதழ்கள் மற்றும் உரிய கட்டணத்துடன் நேரில் சேர்க்கையை உறுதி செய்ய வேண்டும்.

சீட் கிடைத்த மாணவர்கள் கல்லுாரியில் வரும் 19ம் தேதி மாலை 5:00 மணி வரையிலும் சேரலாம்.

தற்போது வெளியாகியுள்ள வரைவு ஒதுக்கீட்டுப் பட்டியலில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, மாணவர்கள் தற்காலிக ஒதுக்கீட்டுப் பட்டியல் வெளியாகி, ஒதுக்கீட்டு ஆணையைப் பதிவிறக்கம் செய்த பிறகே சம்பந்தப்பட்ட கல்லுாரிகளை அணுக வேண்டும்.

வரைவுப் பட்டியலின் அடிப்படையில் எந்த உரிமையும் கோர முடியாது என, சென்டாக் நிர்வாகம் தெளிவுபடுத்தியுள்ளது.

கூடுதல் விவரங்கள், கட்டண விவரங்கள் மற்றும் சந்தேகங்களுக்கு www.centacpuducherry.in என்ற இணையதளத்தையோ அல்லது 0413 2655570 என்ற உதவி எண்ணையோ தொடர்பு கொள்ளலாம்.

இது குறித்த தகவல்கள் மாணவர்களின் எண்ணிற்கு எஸ்.எம்.எஸ்., அனுப்பப்பட்டுள்ளன.

## வீராம்பட்டினம் செங்கழுநீர் அம்மன் கோவிலில் இன்று தேரோட்டம்

**அரியாங்குப்பம், ஆக. 14–**

வீராம்பட்டினம் செங்கழுநீர் அம்மன் கோவிலில் இன்று நடக்கும் தேரோட்டத்தை, கவர்னர் மற்றும் முதல்வர் துவக்கி வைக்கின்றனர்.

வீராம்பட்டினத்தில் செங்கழுநீர் அம்மன் கோவிலில் இன்று காலை 8:00 மணிக்கு தேரோட்டம் நடக்கிறது. கவர்னர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி ஆகியோர் தேரோட்டத்தை துவக்கி வைக்கின்றனர்.

இரவு அம்மன் வீதியுலா நடக்கிறது. நாளை 15ம் தேதி தெப்ப உற்சவம், 21ம் தேதி முத்துப்பல்லக்கு உற்சவம் நடக்கிறது. விழாவை முன்னிட்டு, புதுச்சேரி நகர மற்றும் கிராம பகுதிகளில் இருந்து பொதுமக்கள் வசதிக்காக புதுச்சேரி புதிய பஸ் நிலையத்தில் இருந்து வீராம்பட்டினத்திற்கு பி.ஆர்.டி.சி., சிறப்பு பஸ்களை இயக்குகின்றன.

விழா ஏற்பாடுகளை, விழா குழு தலைவர் நாகமுத்து மற்றும் உறுப்பினர்கள், மக்கள் குழுவினர், கோவில் நிர்வாக அதிகாரி பாலமுருகன், கிராம மக்கள் செய்து வருகின்றனர்.

# ஐ.ஆர்.பி.என்., எஸ்.ஐ., பணிக்கான உடல் தகுதி தேர்வு துவக்கம்



புதுச்சேரியில் ஐ.ஆர்.பி.என்., சப் இன்ஸ்பெக்டர் பணி தேர்வுக்கான ஓட்டப் பந்தையத்தை கோரிமேடு மைதானத்தில், அமைச்சர் நமச்சிவாயம் துவக்கி வைத்தார்.

**புதுச்சேரி, ஆக. 14–**

புதுச்சேரி காவல் துறையில் ஐ.ஆர்.பி.ன்., சப் இன்ஸ்பெக்டர் பணியிடங்களுக்கான உடல் தகுதி, உடற்திறன் தகுதி தேர்வினை அமைச்சர் நமச்சிவாயம் துவக்கி வைத்தார்.

புதுச்சேரி காவல்துறையில் ஐ.ஆர்.பி.ன்., பிரிவில் காலியாக உள்ள 8 சப் இன்ஸ்பெக்டர் பணியிடங்களை நேரடி நியமனத்தின் மூலம் நிரப்புவதற்கான அறிவிப்பு கடந்த மே 18ம் தேதி வெளியிடப்பட்டது.

இதையடுத்து, மொத்தம் 1,871 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உரிய பரிசீலனைக்கு பிறகு தேர்வர்களுக்கான நுழைவுச் சீட்டு வெளியிடப்பட்டது.

தொடர்ந்து, அவர்களுக்கான உடல் தகுதி மற்றும் உடற்திறன் தேர்வு, கோரிமேடு போலீஸ் மைதானத்தில் நேற்று (13ம் தேதி) துவங்கி இரண்டு நாட்கள் நடக்கிறது. இப்பணியினை உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பார்வையிட்டு, உடற்திறன் தேர்வை துவக்கி வைத்தார்.

இதில், டி.ஜி.பி., ஷாலினி சிங்., டி.ஐ.ஜி., சத்தியசுந்தரம், ஐ.ஆர்.பி.ன்., காமண்டென்ட் அனிதா ராய் உள்ளிட்ட போலீசார் கலந்து கொண்டனர்.

நேற்று நடந்த உடல் தகுதி தேர்வில் 406 பேர் பங்கேற்றனர். அதில், 113 பேர் தகுதி பெற்றனர்.

# பொதுமக்களை அச்சுறுத்திய தேனீக்கள் தீவைத்து அழிப்பு

**புதுச்சேரி, ஆக. 14–**

உழவர்கரையில் மக்களை அச்சுறுத்திய தேனீக்களை தீயணைப்பு துறையினர் தீவைத்து அழித்தனர்.

உழவர்கரை தொகுதி, வின்சென்ட் வீதி பகுதியில் அமைந்துள்ள பொதுப் பணித்துறை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் அதே வளாகத்தில் உள்ள பெரிய இலவ மரம் ஆகிய இடங்களில், தேன் கூடுகள் கட்டியிருந்தன. இந்தக் கூடுகளிலிருந்து வெளியேறிய தேனீக்கள், அப்பகுதியில் நடமாடும் பொதுமக்கள், அருகில் உள்ள பள்ளி மாணவர்கள் மற்றும் வாகன ஓட்டிகளை அவ்வப்போது கொட்டி பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வந்தன. இதனால் அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகினர்.

இதுகுறித்து வின்சென்ட் வீதி பொதுமக்கள், உழவர்கரை தொகுதி எம்.எல்.ஏ., நாராயணசாமியிடம் தெரிவித்தனர். அவர், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார்.



உழவர்கரை தொகுதி, வின்சென்ட் நகரில் மக்களை அச்சுறுத்திய தேனீக்களை தீயணைப்பு துறையினர் தீவைத்து அழித்தனர்.

அதன்பேரில், நேற்று இரவு 7:15 மணிக்கு பொதுப்பணித்துறை, வனத்துறை மற்றும் தீயணைப்பு துறையினர் ஒருங்கிணைந்து அங்கு விரைந்து, கிரேன் உதவியுடன் தீப்பந்தங்களை பயன்படுத்தி தேனீக்களைத் தீயிட்டு அழித்தனர். ஒரு மணி நேரம் போராட்டத்திற்கு பிறகு தேனீக் கூடுக்கள் முற்றிலும் அழிக்கப்பட்டது.

# நியூ லிட்டில் கிட்ஸ் பள்ளியில் சுதந்திர தின விழா

**புதுச்சேரி, ஆக. 14–**

தந்தை பெரியார் நகர் நியூ லிட்டில் கிட்ஸ் மழலையர் பள்ளியில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.

பள்ளி முதல்வர் கவிதா சுந்தர்ராஜன் முன்னிலை வகித்தார். தொழிலதிபர் விநாயகம்கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி மழலையர்களுக்கு சுதந்திர தின வாழ்த்து தெரிவித்தார். வேளாண் துறை அலுவலர் கலைச்செல்வன் பங்கேற்று, போட்டியில் வெற்றி பெற்ற மழலையர்களுக்கு பரிசு வழங்கினார். ஒருங்கிணைந்த கோஜூரியோ கராத்தே சங்க மாநில செயலாளர் சுந்தர்ராஜன் வாழ்த்தி பேசினார்.

மழலையர்களின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. சுதந்திர தின நினைவுச் சின்னங்களை மாணவர்கள் காட்சிப்படுத்தினர்.

ஏற்பாடுகளை ஆசிரியர்கள் லட்சுமி பிரியா, மகாலட்சுமி, சுஜாதா, நித்யா, ரேவதி ஆகியோர் செய்திருந்தனர்.



நியூ லிட்டில் கிட்ஸ் மழலையர் பள்ளியில் நடந்த சுதந்திர தின விழாவில் தொழிலதிபர் விநாயகம், வேளாண் அலுவலர் கலைச்செல்வன், சுந்தர்ராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தொ.மு.ச., செயற்குழு கூட்டம்

**புதுச்சேரி, ஆக. 14–**

புதுச்சேரி மாநில தொழிலாளர் முன்னேற்றச் சங்க மாநில செயற்குழு கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள தி.மு.க., தலைமை அலுவலகத்தில் நடந்தது.

தொ.மு.ச., மாநில அமைப்பாளர் அண்ணா அடைக்கலம் தலைமை தாங்கினார். தலைவர் அங்காளன் வரவேற்றார்.

துணைத் தலைவர் ராமகிருஷ்ணன், துணை அமைப்பாளர் சிவக்குமார், சீனுவாசன், துரை, கண்ணன், விஜயபாஸ்கர், கொளஞ்சிநாதன் முன்னிலை வகித்தனர். மாநில அமைப்பாளர் ஆலோசனை வழங்கினார்.

கூட்டத்தில், புதிய தொழிற்சாலைகளை துவக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதிய உயர்வு சட்டத்தை நடைமுறை படுத்த வேண்டும்.

அமைப்புசாரா நலவாரியத்திற்கு தேவையான நிதி ஒதுக்கி, செயல்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும்.

பஞ்சாலை மற்றும் ஸ்பின்கோ தொழிலாளர்களுக்கு நிலுவை தொகையை வழங்க வேண்டும்.

பி.ஆர்.டி.சி.யில் ஒய்வு பெற்றவர்களுக்கு தர வேண்டிய கிராஜூவிட்டி தொகையை உடனடியாக வழங்க வேண்டும் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்க மாநில துணைத் தலைவர் காயாரோகணம் நன்றி கூறினார்.

துாய காற்று பெற மரம் வளர்ப்போம்

# கோரிக்கைகளை வலியுறுத்தி 10ம் நாளாக பேராசிரியர்கள் போராட்டம்

**புதுச்சேரி, ஆக. 14–**

கோரிக்கைகளை வலியுறுத்தி, அரசு கல்லுாரி பேராசிரியர்கள் பத்தாவது நாளாக நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுச்சேரி அரசு வெளியிட்டுள்ள பேராசிரியர்களின் பதவி உயர்வு, ஊதிய நிலுவைத் தொகைக்கு எதிரான, புதிய அரசாணையை திரும்ப பெற வேண்டும். துணைப் பேராசிரியர்களின், அடிப்படை ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும்.

இணைப் பேராசிரியர் தகுதி பெற்றவர்களை, 2017ம் ஆண்டு முதலே, இணைப் பேராசிரியர் என்று பதவி உயர்த்தி ஆணை பிறப்பிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 4ம் தேதி முதல் புதுச்சேரியின் நான்கு பிராந்தியத்தில்



புதுச்சேரி லாஸ்பேட்டை காஞ்சிமா முனிவர் பட்டம் மேற்படிப்பு மையத்தில் பணிபுரியும் துணை பேராசிரியர்கள் சம்பள உயர்வு பதவி உயர்வு வழங்க கோரி, 10வது நாளாக முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

உள்ள அனைத்து அரசு கல்லுாரிகளில் பணிபுரியும் பேராசிரியர்களும் பேராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று பத்தாவது நாளாக, பேராசிரியர்களின் போராட்டம் தொடர்ந்தது. அவர்கள் மாணவர்களின் கல்வி பாதிக்காத வகையில் தங்களது, பணியை முடித்துவிட்டு, போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று மாலை உயர்கல்வி துறை இயக்குனர் அலுவலகத்தை அவர்கள் முற்றுகையிட்டனர். பேராசிரியர்கள் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை, கல்லுாரி வளாகங்களில், பகல், இரவு என, பேராட்டத்தை தொடர்வதாக அறிவித்துள்ளனர்.

**பறிமுதல் செய்யப்பட்ட வாகனத்தின் ஏலம்**
**தேதி: 18.09.2026**
**நேரம்: 11.00Am to 12.00 Noon**

**ஜவஹர்லால் நேரு வீதி கிளை**
बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda 119th FOUNDATION YEAR LEADING WITH TRUST
நெ.1, ராஜீவ்காந்தி சதுக்கம் அருகில், இசிஆர் சாலை, புதுச்சேரி-5.
போன் : 0413 - 2249711/2249700, Mail: vjpond@bankofbaroda.co.in

**வாகன மின்-ஏல அறிவிப்பு**

பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன் வாங்கியவர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், சம்பந்தப்பட்ட தரப்பினரால் கையொப்பமிடப்பட்ட அடமானம்/கடன் ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்ட மோட்டார் வாகனத்தை வங்கி திரும்பப் பெற்றுள்ளது/கைப்பற்றியுள்ளது. மேலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு/கணக்குகளில் நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, **அந்த வாகனம் உள்ளபடியே, இருக்கும் இடத்திலேயே, உள்ளபடியே, என்ன இருக்கிறதோ அப்படியே மற்றும் இருப்பது எதுவாக இருந்தாலும் என்ற அடிப்படையில் விற்கப்படும்.** கடன் வாங்கியவர்(கள்)/ஜாமீன்தாரர்(கள்)/வாகனம்/மொத்த நிலுவைத் தொகை/ மின்-ஏலத் தேதி மற்றும் நேரம், முன்பணம் மற்றும் ஏல உயர்வு தொகை ஆகியவற்றின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| வ. எண் | கடன் தாரர் / ஜாமீன் தாரர் பெயர் மற்றும் முகவரி | வாகனத்தின் வகை / பதிவு எண். | 11.08.2026 அன்று வரை நிலுவைத் தொகை | நிர்ணயிக்கப்பட்ட விலை | EMD தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. தினேஷ் கோத்தாரி முகவரி 1: நெ. 48, 4வது குறுக்குத் தெரு அண்ணா நகர், புதுச்சேரி - 605005. முகவரி 2: நெ. 14A, காட்சியப்பா செட்டி, விக்கரவாண்டி தாலுக்கா, விழுப்புரம் - 605652. | AL E-Comet 1214 BSIII & Heavy Goods Vehicle **TN 32 AK 4869 White** ORIGINAL RC COPY NOT AVAILABLE | ரூ. 16,56,876.38 (பதினாறு லட்சத்து ஐம்பத்தி ஆறாயிரத்து என்னூற்று எழுபத்தி ஆறு மற்றும் முப்பத்தி எட்டு பைசா மட்டும்) + இதர கட்டணங்கள் உட்பட | ரூ. 3,45,000/- | ரூ. 34,500/- |

**மின் ஏல நாள் : 18.09.2026 & நேரம் : காலை 11.00 முதல் நண்பகல் 12.00 மணி வரை**
**குறைந்த பட்ச ஏல உயர்வு தொகை ரூ.5,000/- (ரூ. ஐந்தாயிரம் மட்டும்)**
**வாகனத்தை பார்வையிடும் நாள் & நேரம்: 25.08.2026 காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை**
**BAANKNET Property ID: BARBDINESHKOTHARI**

**நிபந்தனைகள்:** 1. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com என்ற இணையதள இணைப்பை பார்க்கவும். ஏலம் கோர விரும்புவோர் திரு. சோமசுந்தர் குப்புசாமி செல்: 9003681188 அவர்களை தொடர்பு கொள்ளவும். 2. அசல் ஆர்.சி. நகல் இல்லை, வெற்றி பெற்ற ஏலதாரர் 18% GST தொகையை செலுத்த வேண்டும்.

தேதி : 11.08.2026
இடம் : பாண்டிச்சேரி

**அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர் / பேங்க் ஆஃப் பரோடா**